




சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில், நேற்று நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டத்தில், மாவட்டக் கழகச் செயலாளரும் –அமைச்சருமான பி.கே.சேகர்பாபு மற்றும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., சொ.வேலு, வி.சுதாகர், டாக்டர் யாழினி பி.எம், பரிதி இளம்சுருதி, வழக்கறிஞர்.தமிழன் பிரசன்னா, செல்வி.நிவேதா ஜெசிகா, ஏ.வி.ஆர்.கோபால்ராம், சுரேஷ் ஜெ.மனோகரன், வே.கௌதமன், கழக பொறியாளர் அணி துணைச் செயலாளர் வே.உமாகாந்த் உள்ளிட்ட கழக முன்னணியினர் பங்கேற்றனர்.

### க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதியில்

# தமிழ்நாடு தலை குனியாது தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - ஆர்.காந்தி பங்கேற்பு! எழிலன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

காஞ்சிபுரம், பிப்.15

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு தலைகுனியாது தேர்தல் பரப்புரை மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (16.2.2026 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு, வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம், நந்தாநல்லூர், வாலாஜாபாத் - தாம்பரம் சாலையில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். வாலாஜா பாத் தெற்கு ஒன்றியச் செயலாளர் பி.சேகர், உத்திரமேரூர் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன், சாலாவக்கம் ஒன்றியச் செலாயர் தி.குமார், காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் க.குமணன், வாலாஜாபாத் பேரூர் செயலாளர் என். பாண்டியன், உத்திரமேரூர் பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், காஞ்சிபுரம் பகுதிச் செயலாளர் ஆ.தசரவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், ஆர்.காந்தி, மாநில மருத்துவர் அணிச் செயலாளர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக் கூட்டத்தில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., எஸ்.ஆர்.அப்பாதுரை, சி.கே.வி. தமிழ்ச்செல்வன், எழிலரசி சுந்தரமூர்த்தி, ப. சசிகுமார், கே.தியாக ராஜன், ஆர்.கே. தேவேந்திரன், ஹேமலதா ஞானசேகரன், இல்லாமல்லி ஸ்ரீதர், ஜி.சுந்தரமூர்த்தி, ஆர்.குப்பு சாமி, கே.விக்டர் செல்வகுமார், எம்.அமலிசுதா முனுசாமி, கே.ஜெயசீலன், எம். சண்முகம், ஆர்.நரசிம்மன்., ஜி.செந்தமிழன், டி.ச ஞ்சய் காந்தி, ஏ.கணேசன், வி.இராமலிங்கம், எம். பழனி, எஸ்.நடராஜன், டி. பிரபாகரன், ஏ.கருணாகரன், பூங்கொடி, டாக்டர் எஸ்.கே. இளங்கோவன், டி.அன்பு, அண்ணாதுரை, கே.பழனி, டி.பரமானந்தம், எஸ்.செண்பகவள்ளி, சதிஷ் பாபு, ஆச்சி எஸ்.பாபு, பி. பார்த்திபன், என்.சச்சுதாஸ், ஆர்.சுந்தரராமன், என்.ரவி, ஏ.வி. சுரேஷ்குமார், மெய்தீன்ஷெரீப், பத்மாபாபு, இளமதி கோவிந்தராஜ், இரா.மணி, கோ.காளிதாஸ், கே.தயாளன், தே.வீராசாமி, எம்.பி.தாமஸ், எ.மூர்த்தி, கி. கண்ணாயிரம், லோ. பவ்யா, சந்தியா, து.சந்தர், மு.தாமோதரன், ஆ.நீலகண்டன், தா.சுப்புராயன், து. ரமேஷ், எஸ்.ருத்திர கோட்டி, சு.சுகுணா சுந்தர் ராஜன், கெங்கன், தே.பாபு, குமார் தேவ், இரா.கார்த்திகேயன், க.மாயகிருஷ்ணன், ஏ.வீரமணி, பி.மகேந்திரன், ஆ.ஜெயகாந்தா, க.அப்துல் ஹக்கிம், வெ.கோவிந்த ராஜ், வெ.குணசேகரன், மா. கருணாநிதி, ந.ராஜேந்திரன், ஏ.செல்லமுத்து, வி. ராஜபாண்டி

உள்பட சாலவாக்கம் ஒன்றியக் கழக நிர்வாகிகள், காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், காஞ்சிபுரம் பகுதிக் கழக நிர்வாகிகள், உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தி.மு.கழக மாவட்ட, ஒன்றிய,கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி இன்னாள் முன்னாள் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக ஊராட்சி மன்றத் தலைவர் வி.மணி, கிளைச் செயலாளர்கள் ஆர்.முனுசாமி, ஏ.ராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## ஆதிதிராவிடர்நலக்குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகிற 17-02-2026 செவ்வாய்க்கிழமை, நண்பகல் 12.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :


1. தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்.
2. 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தல் - குறித்து

**ஆ. கிருஷ்ணசாமி**, எம்.எல்.ஏ.,
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.02.2026

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குறிச்சி இரா. நாகராசன்
### பிப்ரவரி 15 (2005)



**கோவை மாவட்டம், குறிச்சி பேரூர் கழகமாக இருந்தபோது, சுந்தராபுரம் கிளைப் பொருளாயராக பணியாற்றத் தொடங்கி, பேரூர் ஒன்றிய அவைத் தலைவர், குறிச்சி பேரூர் செயலாளராகவும், பின்னர் குறிச்சி நகரமான பிறகு, நகரச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**குறிச்சி நகராட்சித் தலைவராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக பணியாற்றி அப்பகுதி மக்களின் மனதில் இடம் பிடித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மகிழ்ச்சிப் பெருக்கில் மகளிர்! இது தேர்தல் நோக்கிலான அறிவிப்பல்ல;

# மகளிரின் மனங்களை குளிர்விக்கும் முதல்வரின் அதிரடி அறிவிப்பு!

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் வரவேற்பு!

சென்னை,பிப்.15-

ஒரு கோடியே 31 லட்சம் குடும்பத் தலைவிகளின் வங்கிக் கணக்கில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக 5 ஆயிரம் செலுத்தப்பட்டுள்ளது. இது தேர்தல் நோக்கிலான அறிவிப்பல்ல; மகளிரின் மனங்களை குளிர்விக்கும் முதல்வரின் அதிரடி அறிவிப்பு என 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் வரவேற்பு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள பெண்களுக்கு நேற்று காலை "குட் மார்னிங்" என்பது உண்மையிலேயே "சூப்பர் மார்னிங்" ஆக அமைந்தது. அவர்களது செல்போன்களில் ஒரு குறுஞ்செய்தி வந்தது. அதில், "உங்கள் வங்கி கணக்கில் ரூ.5 ஆயிரம் வரவு வைக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தச் செய்தியை கண்ட பெண்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அதே நேரத்தில், "இந்தத் தொகையை நமது கணக்கில் யார் செலுத்தியுள்ளனர்?" என்ற கேள்வியும் எழுந்தது. வங்கிகள் கூட திறக்கப் படாத அந்த நேரத்தில், இவ்வளவு பெரிய தொகையை யார் செலுத்தியிருக்கலாம் என்ற ஆச்சரியமும் அவர்களுக்குள் நிலவியது. இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில்,


தலையங்கம்
தினத்தந்தி
14.2.2026 (சனிக்கிழமை)
மகிழ்ச்சி பெருக்கில் மகளிர்


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பக்கத்தில் ஒரு வீடியோவை வெளியிட்டார்.

அதில் அவர் வெளியிட்ட அறிவிப்பு, மகளிருக்கு இரட்டிப்பு உற்சாகத்தை அளித்தது. கடும் நிதி நெருக்கடியை சமாளித்து, மத்திய அரசின் ஒதுக்கீட்டுக் குறைப்பு களையும் மீறி கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலில் ஒரு கோடியே 13 லட்சம் பேருக்கு பயனளித்த இந்தத் திட்டம், விரிவுபடுத்தப் பட்டு தற்போது ஒரு கோடியே 31 லட்சம் குடும்பத் தலைவிகள் பயன் பெற்று வருகின்றனர். நடைபெற உள்ள சட்டசபைத் தேர்தலை காரணம் காட்டி, அடுத்த மூன்று மாதங்களுக்கு மாதம் ரூ. 1,000 வழங்கப்படும் மகளிர் உரிமைத்தொகையை நிறுத்துவத ற்காக சிலர் கோர்ட்டில் வழக்கு தொடர முயற்சி செய்து வருவதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, ஒரு முக்கிய முடிவை எடுத்துள்ளதாக அறிவித்தார். அதன்படி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான உரிமைத்தொகையாக ரூ.3 ஆயிரம் மற்றும் கோடைக் காலச் செலவுகளை கருத்தில் கொண்டு சிறப்பு உதவியாக ரூ.2 ஆயிரம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.5 ஆயிரம் நிதி, ஒரு கோடியே 31 லட்சம் பெண்களின் வங்கி கணக்கில் காலையிலேயே வரவு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, மேலும் ஒரு தேர்தல் வாக்குறுதியையும் அளித்தார். மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், தற்போது வழங்க ப்படும் ரூ.1,000 உரிமைத் தொகை ரூ.2' ஆயிரமாக ஆக உயர்த்தப்படும் என்று உறுதியளித்தார்.

ரூ.5 ஆயிரம் உரிமைத் தொகை, மகளிர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதால், இது அரசுக்கு கூடுதல் நிதிச்சுமையை ஏற்படுத்தும் என்று சிலர் கூறலாம். ஆனால் தற்போது வழங்கப் பட்டுள்ள ரூ.5 ஆயிரம் தொகையில் ரூ.3 ஆயிரம் என்பது அரசு மாதம்தோறும் செலவழித்து வரும், ஏற்கனவே பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகைதான். மீதமுள்ள ரூ.2 ஆயிரம் மட்டுமே கூடுதல் செலவாகும். இதற்காக தமிழக அரசுக்கு கூடுதல் செலவு ரூ.2,620 கோடி ஆகும். இது மிகப்பெரிய தொகை அல்ல. வளர்ந்து வரும் பொருளாதாரம் மற்றும் அரசின் வருவாய் நிலையை கருத்தில் கொண்டால், இது தாங்கக்கூடிய செலவு தான். மேலும், அரசின் மொத்த பட்ஜெட்டில் இது ஒரு சதவீதம் கூட இல்லை. வெறும் 0.75 சதவீதம் மட்டுமே ஆகும். இது தேர்தல் நோக்கிலான அறிவிப்பு என்ற விமர்சனங்கள் இருந்தாலும், மகளிரின் மனங்களை குளிர்விக்கும் அறிவிப்பு என்பதில் சந்தேகமே இல்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

### க.தனசேகரன் தலைமையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் 7,300 குடும்பங்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்! தமிழச்சி தங்கபாண்டியன் – ஏ.எம்.வி. பிரபாகரராஜா – கவிஞர் காசி முத்துமாணிக்கம் – வே.உமாகாந்த் பங்கேற்பு!

சென்னை, பிப். 15-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73-வது பிறந்த நாளை முன்னிட்டு விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் 7,300 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (15.2.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் கலைஞர் கருணாநிதி நகர், அண்ணா பிரதான சாலை, அஜந்தா பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

விழாவிற்கு தலைமை செயற்குழு உறுப்பினர், சென்னை மாநகராட்சி நிலைக்குழு கணக்கு மற்றும் தணிக்கை தலைவர் க.தனசேகரன் தலைமை வகிக்கிறார்.

கே.கண்ணன் எம்.சி., மு.இராசா எம்.சி., அ.சேர்மன், உ.துரைராஜ், பி.எஸ். முருகேசன், எஸ்.டி.தங்கராசன், பா.வாசுகி பாண்டியன், கனிமொழி தனசேகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அ.கதிரேசன், கே.சதீஷ் கண்ணன், பி.கே.குமார், என்.ரவி, பா.தினேஷ் குமார், சோழா எஸ்.ரவி, க.ரவிக்குமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் மா. சுப்பிரமணியன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை யாற்றுகிறார்.

மேலும் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., கவிஞர் காசி முத்துமாணிக்கம், வே.உமாகாந்த், ஆர்.சசிகுமார், நிஷா சையத், ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., நிலவரசி துரைராஜ் எம்.சி. ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

இவ்விழாவில் எஸ்.கமலக்கண்ணன், எஸ். விஜயகுமார், சா.நாகராசன், பி.விஜயலட்சுமி, து.ரஞ்சித் குமார், சோ.செந்தில்குமார், இரா.செழியன், ஆர்.பழனிச்சாமி, ஜம்பு முருகன், பொன்.வர.லோகு, எஸ். மைக்கேல், மு.கோவிந்த ராஜன், வி.ஏ.ராஜா, எஸ்.பாஸ்கரன், ஆர்.பாபு, அய்யாவு பழனி, க.இளங்கோ, த.முத்துமாரியப்பன், போஸ்.பழனியப்பன், ஏ.ஜெகதீசன், கே.முருகன், எம்.வீரா, கே.சசி, க.கருணாகரன், சி. நந்தகோபால், பூ.ராஜா, இரா.சங்கர், டி.எஸ்.பி. தென்னரசு, சு.இளங்கோவன், சொ.ஜெயக்குமார், க. அர்ஜுனன், வி.ச.சங்கரன், எஸ்.எம்.டி.முகேஷ், எஸ். சண்முகம், க.பாலமுருகன், ச.ரா.சீனிவாசன், அ.ஸ்ரீதர், அர.அ.எழில்வாணன், ஆர். டி.நல்லேந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக எஸ்.உமாபதி, எஸ்.ரவி, பெ.தியாகு, அ.பாபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி பகுதியை சேர்ந்த தேவேந்திரன் அண்டர் 19 – கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து மற்றும் இந்தியா விளையாடி உலகக் கோப்பையை கைப்பற்றிய இந்திய அணியில் இடம்பெற்றிருந்த கிரிக்கெட் வீரரை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி நேரில் சந்தித்து சால்வை அணிவித்து பாராட்டி ரூ.10,000 வெகுமதி வழங்கி வாழ்த்து தெரிவித்தார். மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, வட்ட கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த.வேணுகோபால்
### பிப்ரவரி 15 (2024)



**தந்தை பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.**

**திருவண்ணாமலை மாவட்டக் கழக அவைத் தலைவராக முப்பதாண்டு காலம் பொறுப்பேற்று பணியாற்றியவர்.**

**ஊராட்சி மன்ற தலைவராக – ஒன்றிய பெருந்தலைவராக – இரண்டு முறை தண்டராம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக – நான்கு முறை திருப்பத்தூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக – 2009ஆம் ஆண்டு திருவண்ணாமலை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக என 60 ஆண்டுகளுக்கும் மேலாகப் பொதுவாழ்வில் ஈடுபட்டு மக்கள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**2019ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "பெரியார் விருது" வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**